**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**CP.No. : 150/2018 சாட்சியம் : RW1**

**Name : மனோஜ் ஜான் வியான்னி**

**Date : 19.08.2024**

**Time : 11.45.a.m. to12.30 P.m.**

**<u>எ.சா.1 திரு.மனோஜ் ஜான் வியான்னி என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>**

மனு விவரம் தெரியும். அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாத காரணத்தினால் நஷ்ட ஈடு கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார்கள். இந்த மனு தாக்கல் செய்வதற்கு முன்னர் மனுதாரர்கள் நிர்வாகத்திற்கு ஒரு தொகையை தர கேட்டு கடிதம் அனுப்பிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூல சாட்சியத்தில் பத்தி 1ல் மனுதாரர்கள் 19 பேரும் பயிற்சியாளர்களாக 2009-2011 காலகட்டத்தில் சேர்ந்ததாகவும் பத்தி 4ல் அவர்கள் 29.04.2008 மற்றும் 02.05.2009 இடைப்பட்ட காலத்தில் சேர்ந்ததாகவும் சொல்லி உள்ளதில் எது சரி என்றால் பத்தி 4ல் சொன்னது தான் சரி. 29.04.2008க்கு முன்னர் மனுதாரர்கள் எதிர்மனுதாரர் கம்பெனியில் வேலை பார்த்தார்களா என்ற விவரத்தை ஆவணங்களை பார்தால்தான் சொல்ல முடியும். 2008 க்கு முன்னர் உள்ள காலகட்டத்தில் உள்ள ஆவணங்களை நான் பார்க்கவில்லை. நிர்வாகம் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் நான் பார்த்து அதன் பின்னர் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். எ.சா.ஆ.5ல் குல்சார் அகமத் 2007ல் விடுப்பு எடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எ.சா.ஆ.19ல் திருவேங்கடம் 2007-2011 வரை விடுப்பு எடுத்ததற்கான ஆதாரமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் அவர் 2007ல் விடுப்பு எதுவும் எடுக்கவில்லை என குறிப்பு உள்ளது என்றால் ஆமாம். எனவே திருவேங்கடம் 2007ஆம் ஆண்டே வேலைக்கு சேர்ந்ததாக எடுத்துக்கொள்ளலாம் என்றால் இல்லை. அது ஒரு பொதுவான படிவம் ஆகும். எனில் திருவேங்கடம் எந்த ஆண்டு வேலையில் சேர்ந்தார் என்றால் 22.11.2007ல் வேலைக்கு சேர்ந்தார். எ.சா.ஆ.29ல் தியாகராஜன் 2006லிருந்து வேலையில் இருப்பதாக கண்டுள்ளது என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்லமுடியும். எ.சா.ஆ.29ல் தியாகராஜன் 2006ல் 4 நாட்கள் விடுப்பு எடுத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான்.

எ.சா.ஆ.48ல் செபாஸ்டின் 2007ல் 9 நாட்கள் விடுப்பு எடுத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் நிர்வாகத்தில் இருந்து மனுதாரர்களுக்கு 2008க்கு முன்னர் பயிற்சி உத்தரவு கொடுத்துள்ளார்களா என்றால் ஆவணங்களை பார்க்கவேண்டும். எங்கள் நிறுவனமானது Bundy India Limited என்ற பெயரில் இயங்கி வந்தது என்றால் இரண்டும் வேறுவேறு நிறுவனம் ஆகும். Bundy India Limited தான் Hanil Tube India Limited என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் தெரியாது. மனுதாரர்கள் Bundy India Limited ல் வேலைக்கு சேர்ந்து Hanil Tube India Limited என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்னர் அங்கு பணியை தொடர்ந்தார்கள் என்றால் தெரியாது. மனுதாரர்கள் Conferment Authority முன்பு எந்த வருடம் மனு தாக்கல் செய்தார்கள் என தெரியாது. 2010 ல் Conferment Authority பிறப்பித்த உத்தரவில் எந்த தேதியில் இருந்து பணி உறுதி செய்ய வேண்டும் என சொல்லி உள்ளார்கள் என தெரியாது. அந்த உத்தரவிற்கு எதிராக நிர்வாகம் நீதிபேராணை மனு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டது என்றால் ஆமாம். இதன் மீதான மேல் முறையீடு அனுமதிக்கப்பட்ட விவரம் தெரியாது. பின்னர் மீண்டும் Conferment Authority முன்பு விசாரணைக்கு வந்து 2015ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரியும். 2015ல் Conferment Authority பிறப்பித்த உத்தரவு விவரம் முழுவதுமாக தெரியாது. Conferment Authority முன்பு நிர்வாகம் மனுதாரர்களுக்கு பணி நிரந்தர உத்தரவு வழங்க கூடாது என தாக்கல் செய்த பதில் உரை பற்றி தெரியாது. 2015ல் Conferment Authority பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என தெரியாது. சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபேராணை நிலுவையில் இருந்தபோது மனுதாரர்கள் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டார்கள் என்றால் இல்லை. 2010ல் நீதிபேராணை தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. 2010ல் நீதிபேராணை தாக்கல் செய்யப்பட்டு 2015ல் மேல் முறையீடு உத்தரவு பிறப்பித்து 2011ல் மனுதாரர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்றால் தெரியாது. நாங்கள் எடுத்திருக்கும் எதிர்வாதத்ததை தான் Conferment Authority முன்பும் எடுத்திருந்தோம் என்றாலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டாமல் நிராகரிக்கப்பட்ட பின்னரும் அதே வாதத்தை இந்த மனுவிலும் பதிலாக தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் Conferment Authority

முன்பு தாக்கல் செய்த பதில் பற்றி தெரியாது. மனுதாரர்கள் 480 நாட்கள் வேலையை எந்த தேதியில் முடித்தார்கள் என தெரியாது. மனுவின் விவரம் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்வதற்கு முன்னர் அவர்களுக்கு வரவேண்டிய தொகையை பொருத்து கணக்கு விவரத்தை நிர்வாகத்திற்கு அனுப்பினார்கள் என்றாலும் அதற்கு நிர்வாகம் பதில் அளிக்கவில்லை என்றாலும் அது பற்றி தெரியாது. செட்டில்மெண்டில் தொழிலாளிகள் கையொப்பம் போட்டு வாங்கி இருக்கிறார்களா என்றால் இல்லை. நாங்களாக அனுப்பி வைத்தோம். Conferment Authority பயிற்சியாளர்களாக மனுதார்களை வகைப்படுத்தியது தவறு என்றும் மனுதாரர்கள் அனைவரும் நிரந்தர தொழிலாளர்கள் என உத்தரவு பிறப்பித்த பின்னர் நாங்கள் மனுதாரர்கள் பயிற்சியாளர்கள், பயிற்சி முடிந்த உடன் அனுப்பி விட்டோம் என எடுக்கும் எதிர்வாதமானது ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் தெரியாது. வழக்கு விவரம் தெரியாமல் சாட்சியம் அளித்திருப்பதால் அது ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல. மனுப்படி உத்தரவாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

S SUJATHA

Presiding Officer,
Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2024.08.21 18:30:13 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:19.08.2024.